## மேகதாது : காவிரி டெல்டா விவசாயிகளின்

# வாழ்வாதாரம் பாதிக்காமல் இருக்க ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

## மக்களவையில் தயாநிதி மாறன் கேள்வி!

புதுடெல்லி, ஆக. 3-

கர்நாடகா அரசின் மேகதாது திட்டத்தால் காவிரி டெல்டா விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்காமல் இருக்க ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன? என்றும் இத்திட்டத்திற்கான ஒப்புதல்களைப் பரிசீலிப்பதற்கு முன்னதாக தமிழ்நாடு அரசுடன் ஆலோசனை நடத்தப்பட்டதா? என்றும் ஒன்றிய ஜல் சக்தித் துறை அமைச்சர் சி.ஆர். பாட்டீல் அவர்களிடம் கழக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவரும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன் பல கேள்விகளை எழுப்பியுள்ளார்.

அதன் விவரங்கள் பின் வருமாறு:



கர்நாடக மாநில அரசால் முன்மொழியப்பட்ட மேகதாது அணையானது, தமிழ்நாட்டில் உள்ள காவிரி டெல்டா விவசாயிகளின் வாழ்வாதாரம், விவசாய உற்பத்தி மற்றும் பாசனம் ஆகியவற்றின் மீது ஏற்படுத்தக்கூடிய பாதிப்பை ஒன்றிய அரசு ஆய்வு செய்துள்ளதா? அவ்வாறெனில், எடுக்கப்பட்ட முடிவுகள் என்ன?

இத்திட்டத்தை எதிர்த்து தமிழ்நாடு அரசு மற்றும் விவசாய அமைப்புகளிடமிருந்து கோரிக்கைகள் அல்லது கருத்துருக்கள் வந்துள்ளனவா? அவ்வாறெனில், அதுகுறித்த விவரங்கள் மற்றும் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?ய

தமிழ்நாட்டில் விவசாயத்திற்குத் தேவையான காவிரி நீர் சரியான நேரத்தில் திறந்துவிடப்படுவதில் இத்திட்டம் ஏற்படுத்தக்கூடிய பாதிப்பை ஒன்றிய அரசு ஆய்வு செய்துள்ளதா? அவ்வாறெனில், அதுகுறித்த விவரங்கள் என்ன

இத்திட்டத்திற்கான ஒப்புதல்களைப் பரிசீலிப்பதற்கு முன்னதாக தமிழ்நாடு அரசுடன் ஏதேனும் கலந்தாலோசனை நடத்தப்பட்டதா? அவ்வாறெனில், அதுகுறித்த விவரங்கள் என்ன?

காவிரி டெல்டா விவசாயிகளின் நலன்களைப் பாதுகாக்கவும், நதிநீரில் தமிழ்நாட்டிற்கான நியாயமான பங்கை பாதிக்கும் வகையிலான எந்தவொரு திட்டத்திற்கும், தற்போதுள்ள தீர்ப்பாய மற்றும் உச்ச நீதிமன்ற உத்தரவுகளை மீறி ஒப்புதல் அளிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்யவும் எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன? என மக்களவையில் தயாநிதி மாறன் கேள்வி எழுப்பினார்.

---

## த.வெ.க. அமைச்சர்கள் – எம்.எல்.ஏ.க்கள் மீது குற்ற நடவடிக்கை எடுத்தால்

# ஆட்சிக்கு ஆபத்து வந்து விடும் என்ற அச்சமா சி.எம்.சார்?

## சட்டப் பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு விமர்சனம்!

சென்னை, ஆக. 3-

சட்டப் பேரவை முன்னாள்தலைவர்மு.அப்பாவு விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

த.வெ.க. வேட்பாளர்கள் தேர்தலில் Party Fund கொடுத்து வந்தவர்களாக இருப்பதாலும் அவர்கள் தனக்குயார்என்றுமுழுமையாக தெரியாததாலும் அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள்மீதுமுதல்வருக்குமுழு நம்பிக்கையும் ஒருங்கிணைப்பும் இல்லை.

மேலும் காங்கிரஸ் உட்பட சிலகூட்டணிக்கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சி நடந்தாலும், அவர்களோடு கூட்டணிக் கொள்கை முடிவோ, கூட்டணி பெயரோ வைக்க முடியாத குழப்பத்தில் உங்கள் ஆட்சி தொடர்கிறது உண்மையா CM sir ?



தான்தோன்றித்தனமாக தமிழக அமைச்சர்களான கீர்த்தனா, ராஜ்மோகன், ஒன்றிய அரசு அனுமதி இல்லாமல் டிப்ளமேட்டிக் பாஸ்போர்ட் இல்லாமல் தென்கொரியா சென்று வந்தது, வேளாண் பட்ஜெட் சட்டமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு முன்பே வேளாண் பட்ஜெட்டை திருடி திருப்பதிக்கு கொண்டு சென்ற வினோத் அமைச்சர் , லட்சுமணன் என்பவரை ஜட்டியோடு விட்டு அடித்து கொன்று விடுவேன் என்று மிரட்டும் ஜெகதீஷ்வரி அமைச்சர், சகோதரர் வீட்டுக்கே சென்றுகொலைவெறிதாக்குதலில் ஈடுபட்ட நிதி அமைச்சர் வில்சன், பொது வெளியில் போதை வஸ்துக்களை பயன்படுத்திய அமைச்சர் சரத்குமார் மற்றும் பாலியல், லஞ்ச குற்ற புகார்களில் உள்ள எம்.எல்.ஏக்கள் மீது குற்ற நடவடிக்கைஎடுத்தால்ஆட்சிக்கு ஆபத்துவந்துவிடுமோஎன்ற அச்சத்தில்உள்ளவிஜய், அதனை திசை திருப்புவதற்காக திமுகழகத்தினர் மீதுதினமும்பொய்வழக்குகள் பதிவு செய்வது நியாயமா CMsir ?

**‘எட்டப்பன்’ நீங்களா சி.எம்.சார்!**

காங்கிரஸ் ஆதரவுடன் தமிழ்நாட்டில்பா.ஜ.க., RSS சித்தாந்த ஆட்சி நடத்தும் தமிழக முதல்வர், தன்னை சந்திக்க வரவில்லையே என்றவருத்தத்துடன்மறைமுகமாகவிஜய்யை“எட்டப்பன் ” என்று ராகுல்காந்தி விமர்சித்ததாக அரசியல் நோக்கர்கள்கருதுவதுஉண்மையா CM sir ?

இவ்வாறு சட்டப் பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு தெரிவித்துள்ளார்.

---

## தஞ்சையில் இன்று மாபெரும் ஆர்ப்பாட்டம்!

# திருச்சி மத்திய - வடக்கு மாவட்டக் கழகத்தினர் பங்கேற்பீர்!

## மாவட்டச் செயலாளர்கள் க.வைரமணி – ந.தியாகராஜன் அறிக்கை!

திருச்சி, ஆக. 3-

திருச்சி மத்திய மாவட்ட திமுக செயலாளர் க.வைரமணி, வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் ந. தியாகராஜன் கூட்டாக வெளியிட்ட அறிக்கை வருமாறு:

பயிர்க்கடன் தள்ளுபடியில் மோசடி - மேகதாது அணைக்கட்டும் பிரச்சனையில் கைக்கட்டி வேடிக்கை பார்ப்பது, மேட்டூர் அணையில் இருந்து ஜூன்12 அன்று தண்ணீர் திறக்காதது, காவிரி பிரச்சனையில் கர்நாடக முதல்வரை சந்திக்க போவதாக பொய்யான தகவல்களை பரப்புவது இப்படி டெல்டா மாவட்ட விவசாயிகளுக்கு துரோகத்திற்குமேல் துரோகம் செய்யும் த.வெ.க அரசை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் இன்று (03.08.2026-திங்கள் கிழமை) காலை 9.30 மணியளவில் தஞ்சை பனகல் கட்டிடம் அருகில் எதிர்க்கட்சி தலைவர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையிலும், சட்டமன்ற எதிர்க்கட்சி துணைத்தலைவரும் கழக முதன்மை செயலாளருமான அண்ணன் கே.என். நேரு அவர்களின் முன்னிலையிலும் நடைபெறவிருக்கிறது. இந்த ஆர்ப்பாட்டத்தில் திருச்சி மத்திய, வடக்கு மாவட்ட, மாநகர, அனைத்து ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளை கழக நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் பொறுப்பாளர்கள் கழக முன்னோடிகள், செயல் வீரர்கள், விவசாயிகள், விவசாய சங்க தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் உள்ளிட்ட அனைவரும் தவறாது கலந்துகொண்டு த.வெ.க அரசின் முதல்வரை கண்டித்து தஞ்சையில் நடைபெறுவிருக்கும் ஆர்ப்பாட்டத்தினை மாபெரும் வெற்றிப்பெற செய்ய வேண்டுகிறோம்.

இவ்வாறு அவர்கள் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

---

## விவசாயிகளை வஞ்சிக்கும் த.வெ.க.அரசைக் கண்டித்து தி.மு.க.சார்பில்

# தஞ்சையில் இன்று மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் திரளாக பங்கேற்பீர்!

## பெரம்பலூர் மாவட்டக் கழகத்தினருக்கு வீ.ஜெகதீசன் வேண்டுகோள்!

பெரம்பலூர், ஆக. 3 –

பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் அறிக்கை வருமாறு:–

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிக்கையினை ஏற்று,

கழக துணைப் பொதுச்செயலாளர் மேனாள் ஒன்றிய அமைச்சர் ஆ.இராசா.எம்.பி. வழிகாட்டுதல்படி,

விவசாய கடன் முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டியும்,மேகதாது அணை கட்டுவதை தடுக்க தவறியதைக்கண்டித்தும், டெல்டா மாவட்டங்களை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டியும்,பயிர்க்கடன் தள்ளுபடி மோசடியை கண்டித்தும், மேக தாது பிரச்னையை கைகட்டி வேடிக்கை பார்ப்பது, மேட்டூர் அணையில் இருந்து ஜீன்12, அன்று தண்ணீர் திறக்காதது, காவிரி பிரச்சினையில் அனைத்து கட்சி கூட்டத்தை கூட்ட மறுப்பது, கர்நாடக முதல்வரை சந்திக்க போவதாக அதிகாரமற்ற தகவல்களை உலவ விட்டு ஆழம் பார்ப்பது என தமிழ்நாட்டு விவசாயி களுக்கு துரோகம் செய்யும் விளம்பர மாடல் த.வெ.க. அரசைக் கண்டித்து இன்று (03.08.2026) திங்கட்கி ழமை காலை பத்து மணிக்கு தஞ்சை பனகல் கட்டிடம் அருகில், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் மாபெரும் கண்டன நடைபெறுகிறது.

இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் கழக முதன்மைச் செயலாளர் கே. என்.நேரு வரவேற்புறையாற்றுகிறார்.

மனித நேய மக்கள் கட்சி மாநிலச் செயலாளர் எம்.ஹெச்.ஜவாஹிருல்லா,ம.ஜ.க. மாநில தலைவர் மு.தமீமுன்அ ன்சாரி, எஸ்.டி.பி.ஐ. மாநிலச்செயலாளர் நெல்லை முபாரக்,தி.க.மாநில பொதுச் செயலாளர் இரா.ஜெயக்குமார் மற்றும் தே.மு.தி.க., மக்கள் தமிழக நீதி மையம் உள்ளிட்ட தோழ மைக் கட்சி நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர். இதில் பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகி கள், ஒன்றிய,நகர, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்களர், முன்னாள், இன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளை, வார்டு கழகச் செயலாளர்கள், கழக முன்னோடிகள் உள்ளிட்ட அனைவரும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்று பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

## இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசியத் தலைவர்

# கே.எம்.காதர் மொகிதீன் புதல்வர் கே.எம்.கே.கலீலூர் ரஹ்மான் மறைவு!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஆக.3-

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம்.காதர் மொகிதீன் அவர்களின் புதல்வர் - அறிவியலாளர் கே.எம்.கே.கலீலூர் ரஹ்மான் மறைவுக்கு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தேசியத் தலைவர் அய்யா கே.எம். காதர் மொகிதீன் அவர்களது பாசத்திற்குரிய மகனும், அறிவியலாளருமான கே.எம்.கே.கலீலூர் ரஹ்மான் அவர்களது மறைவுச் செய்தியறிந்து பெரிதும் வருந்தினேன்.

பெற்றெடுத்து பேரன்பு செலுத்தி வளர்த்து, ஆன்றோர் அவையில் பெரும்புகழ் எய்திடக் கண்ட மகன் மண்ணுலகைவிட்டு பிரிந்த துயர் தாளாது வேதனையில் வாடும் அய்யா காதர் மொகிதீன் அவர்களைத் தொலைபேசியில் தொடர்புகொண்டு, அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொண்டேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

---






# திராவிட இயக்கத்தின் நட்புப் பாரம்பரியம்!

உலகம் முழுவதும் நட்பின் மகத்துவத்தைப் போற்றும் இந்த இனிய நட்புநாளில், நண்பர்கள் அனைவருக்கும் எனது இதயம் நிறைந்த நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மனிதன் பிறக்கும்போது உறவுகள் கிடைக்கின்றன. ஆனால் நல்ல நண்பர்களை அவன் தனது பண்பாலும், அன்பாலும், நம்பிக்கையாலும் பெற்றுக்கொள்கிறான். சாதி, மதம், மொழி, இனம், பொருளாதார நிலை, அரசியல் வேறுபாடுகள் ஆகிய எல்லைகளைக் கடந்து, மனிதர்களை இதயத்தால் இணைக்கும் உயர்ந்த உறவுதான் நட்பு.

தமிழர்களின் வாழ்வியலில் நட்புக்கு மிக உயர்ந்த இடம் வழங்கப்பட்டுள்ளது. திருவள்ளுவர்,

**“முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து**
**அகநக நட்பது நட்பு”**

என்று கூறுகிறார்.

முகம் மலர்ந்து பேசுவது மட்டும் நட்பல்ல; நண்பனை நினைக்கும்போது நெஞ்சமும் மலர வேண்டும் என்பதே வள்ளுவர் காட்டும் உண்மையான நட்பின் இலக்கணம்.

அதேபோல்,

**“உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே**
**இடுக்கண் களைவதாம் நட்பு”**

என்று, துன்பம் வந்த பிறகு அழைத்தால் உதவுவது அல்ல; உடை நழுவும்போது கை இயல்பாக விரைந்து சென்று காப்பதுபோல, நண்பனின் இடுக்கணை உணர்ந்து உடனடியாகக் களைவதே உண்மையான நட்பு எனத் தமிழ்மறை எடுத்துரைக்கிறது.

சங்க இலக்கியம் நமக்கு வழங்கிய கோப்பெருஞ்சோழன்-பிசிராந்தையார் நட்பு, நேரில் சந்தித்துப் பழகாமலேயே உள்ளங்களும் உயர்ந்த எண்ணங்களும் ஒன்றுபட்டால் அழியாத நட்பு மலரும் என்பதற்கான உலகப் புகழ்பெற்ற சான்றாகும். காலத்தையும், தூரத்தையும், அதிகாரத்தையும் கடந்து வாழ்ந்த அந்த நட்பு, தமிழர்களின் பண்பாட்டுச் செல்வமாக இன்றும் நிலைத்திருக்கிறது.

திராவிட இயக்கத்தின் நட்புப் பாரம்பரியம்

இந்த உயர்ந்த நட்புப் பண்பாடு, தமிழ்நாட்டின் திராவிட இயக்க அரசியல் வரலாற்றிலும் தொடர்ந்து வெளிப்பட்டுள்ளது.

**தந்தை பெரியாருக்கும் பேரறிஞர் அண்ணாவுக்கும் இடையே இருந்தது வெறும் தலைவர்-தொண்டர் உறவல்ல; சமூகநீதி, சுயமரியாதை, பகுத்தறிவு ஆகிய இலட்சியங்களால் இணைக்கப்பட்ட ஆழமான இயக்க உறவு.**

அரசியல் பயணங்களில் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டபோதும், ஒருவருக்கொருவர் அளித்த மரியாதையும், வரலாற்றுப் பங்களிப்பை அங்கீகரித்த பண்பும் திராவிட இயக்கத்தின் அரசியல் நாகரிகத்தை எடுத்துக்காட்டியது.

**பேரறிஞர் அண்ணாவுக்கும் முத்தமிழறிஞர் கலைஞருக்கும் இடையே இருந்த அன்பும் நம்பிக்கையும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சிக்கு வலிமையான அடித்தளமாக அமைந்தது.**

அண்ணாவின் கொள்கைகளைத் தனது வாழ்நாள் முழுவதும் கலைஞர் பாதுகாத்து வளர்த்தது, அரசியல் நட்பின் உயர்ந்த வெளிப்பாடாகும்.

முத்தமிழறிஞர் கலைஞருக்கும் இனமானப் பேராசிரியருக்கும் இடையே ஏழு தசாப்தங்களுக்கும் மேலாக நீடித்த நட்பு, தமிழ்நாட்டின் அரசியல் வரலாற்றில் தனித்துவமான அத்தியாயமாகும்.

அதிகாரம், பதவி, வெற்றி, தோல்வி என அனைத்துக் காலங்களிலும் ஒருவருக்கொருவர் துணையாக நின்ற அவர்களது நட்பு, இயக்கத் தோழமை எவ்வாறு



இருக்க வேண்டும் என்பதற்கான இலக்கணமாகும்.

கலைஞரும் மக்கள் திலகம் எம்.ஜி.ஆரும் ஒரே இயக்கத்தில் இணைந்து பணியாற்றிய காலத்தில் மலர்ந்த நட்பும், திரைத்துறை மற்றும் அரசியலின் வாயிலாக திராவிடக் கருத்துகளை மக்களிடம் கொண்டு சென்ற அவர்களது கூட்டுப்பணியும் வரலாற்றுச் சிறப்புடையவை.

பின்னாளில் அரசியல் எதிரணிகளில் நின்ற போதிலும், அவர்களது பழைய நட்பும் தனிப்பட்ட அன்பும் தமிழ்நாட்டு அரசியல் வரலாற்றில் மறக்க முடியாத நினைவுகளாக நிலைத்திருக்கின்றன.

**அந்தத் திராவிட இயக்கத் தோழமையின் தொடர்ச்சியாக, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும் கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன் அவர்களுக்கும் இடையே நிலவும் நீண்டகால நம்பிக்கை, பாசம் மற்றும் அரசியல் தோழமை, இயக்கம் என்பது பதவிகளால் மட்டுமல்ல; கொள்கையாலும், விசுவாசத்தாலும், மனித உறவுகளாலும் கட்டமைக்கப்படுகிறது என்பதை இன்றைய தலைமுறைக்கு எடுத்துக்காட்டுகிறது.**

அரசியல் வேறுபாடுகளைத் தாண்டிய மனிதநேயம்

அரசியலில் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். கொள்கைப் போராட்டங்கள் இருக்கலாம். ஆனால் அவை தனிப்பட்ட பகையாகவும் வெறுப்பாகவும் மாறிவிடக் கூடாது.

எதிர்க்கருத்தையும் மதித்து, மனிதநேயத்தையும் அரசியல்நாகரிகத்தையும்பாதுகாப்பதேதமிழ்நாட்டின் உயர்ந்த அரசியல் மரபாகும்.

இன்றைய சமூக ஊடக உலகில் ஆயிரக்கணக்கான தொடர்புகள் நமக்குக் கிடைக்கலாம். ஆனால் நமது வெற்றியில் மகிழ்ந்து, தவறுகளை உரிமையோடு சுட்டிக்காட்டி, துன்பத்தில் தோள்கொடுத்து, நம்மிடம் எதையும் எதிர்பார்க்காமல் துணை நிற்கும் ஒரே ஒரு உண்மையான நண்பர் கிடைப்பது வாழ்க்கையின் மிகப்பெரிய செல்வமாகும்.

இந்த நட்புநாளில்,

**பழைய நண்பர்களை நினைவுகூர்வோம்.**
**பிரிந்த நண்பர்களிடம் மீண்டும் பேசுவோம்.**
**மனக்கசப்புகளை மறப்போம்.**

தனிமையில் இருப்பவர்களுக்கு நண்பர்களாக இருப்போம்.

அன்பு, சமத்துவம், சகோதரத்துவம் மற்றும் மனிதநேயம் நிறைந்த சமூகத்தை உருவாக்குவோம்.

**★★“நண்பனைப் பெறுவது வாழ்க்கையின் வரம்;**
**உண்மையான நண்பனாக இருப்பது மனிதனின் அறம்!”★★**

அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை எனது இனிய நட்புநாள் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**துரைமுருகன் கதிர் ஆனந்த்**
நாடாளுமன்ற உறுப்பினர்
வேலூர் மக்களவைத் தொகுதி



---

# மின் கட்டண கணக்கீட்டில் குளறுபடி - அதிக வசூல்!

## தமிழ்நாடு மின்சார வாரியம் ஒப்புதல்!

சென்னை, ஆக. 3-

தமிழ்நாடு முழுவதும் சுமார் 3.70 லட்சம் மின் இணைப்புகளில் மின் கட்டண கணக்கீட்டில் வேறுபாடுகள் உள்ளதாக எழுந்த புகாரின் பேரில் நடத்தப்பட்ட முதற்கட்ட ஆய்வில் 15,323 மின் இணைப்புகளில் 100 மின் இணைப்புகளில் மட்டுமே வேறுபாடு கண்டறியப்பட்டுள்ளதாக தமிழ்நாடு மின்சார வாரியம் ஒப்புக்கொண்டுள்ளது.

மின்கட்டணம் தொடர்பாக சில தரப்பினரால் எழுப்பப்பட்ட சந்தேகங்களைத் தொடர்ந்து, மின்நுகர்வோரின் நலனைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு மின்சார வாரியம் மாநிலம் முழுவதும் சிறப்பு மின்னளவி (மீட்டர்) மறுஆய்வுப் பணியை நேற்று முதல் தொடங்கியுள்ளது.

வேறுபாடு கண்டறியப்பட்ட மின் இணைப்புகளில், கள ஆய்வின் அடிப்படையில் விதி முறைகளுக்கு இணங்க மின்கட்டணங்கள் உரிய முறையில் திருத்தி அமைக்கப்படும். மாநிலம் முழுவதும் சுமார் 3.70 லட்சம் மின் இணைப்புகளில் இந்தச் சிறப்பு மின்கட்டண கணக்கீட்டில் மறு ஆய்வுப் பணிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டு ஆய்வுப்பணிகள் நடைபெற்று வருகிறது. இந்த நடவடிக்கையின் மூலம் மின்கட்டண கணக்கீட்டில் வெளிப்படைத் தன்மையை மேலும் உறுதி செய்வதோடு, மின்நுகர்வோ ரின் சந்தேகங்களுக்கு உரிய விளக்கம் அளிக்கவும் தமிழ்நாடு மின்சார வாரியம் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

இதன் மூலம் மின் கணக்கீட்டில் அதிகம் வசூலித்தது - குளறுபடி நிகழ்ந்துள்ளதை மின்சார வாரியம் ஒப்புக் கொண்டுள்ளது.